**தலைப்பு 290 – கடற்தொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 3.1.1 அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட 01 வருமானக் கணக்கு கடற்தொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்கள கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 290 – கடற்தொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 26 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்,

செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கடற்தொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியான முறையில் தயாரித்திரு க்கவில்லை | 2.1.1 |
| | | 2. பெறுகை விடயங்கள் போதியளவில் திட்டமிடப் படாமை | 2.2.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை | 2.10 |
| | | 4. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை | 2.1.2(ஆ) |
| | | 5. பெறுகை செயன்முறையை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறை வேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.2(இ) |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்கு களில் குறைபாடுகள் | 2.7 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற் பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | வருடாந்த பண்டக் கணிப்பீட்டில் குறைபாடுகள் | 2.3.1 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறை சேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்படல் | 2.1.3 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | வருமானக் கணக்கில் குறிப் பிட்டுள்ள குறைபாடுகள் | 2.7(அ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | 1. வருமானக் கணக்கு களில் குறைபாடுகள்<br>2. அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற் பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல். | 2.7(அ)<br>2.8(அ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப் பெறுவதை உறுதிப் படுத்துதல்) | செயற்திட்டங்கள் நிறை வேற்றுவதில் தாமதங்கள் | 2.1.2(இ) |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரு க்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், (நி.பி. 150 ஐப் பார்க்க) | ஒதுக்கீட்டுக் கணக்குகளில் குறிப்பிட்டுள்ள குறைபாடு கள் | 2.6 |

**நிதிப் பிரமாணம் 128(2) – அரச வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கணக்களிப் பொறுப்பு**

---

| | | | |
|---|---|---|---|
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டுக்குரிய வருமான மதிப்பீடுகளில் முற்றாகவும் இயன்றளவு செம்மையாகவும் தயாரிக்கப் படுகின்றன என்பதனையும் | 1. எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிக்க முடியாமல் போனமை/ சேகரிக்க கூடியதாக இருந்த வருமானம் அதிகரிப்பின் போது அல்லது குறைவின் போது வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை | 2.7 |
| 128(2)(இ) | வருமானக் குறியீட்டுக்குரிய நிதியாண்டின் ஜூன் 30 ஆந் திகதியன்றும் திசெம்பர் 31 ஆந் திகதியன்றும் உள்ளவாறான அரசிறை நிலுவைகளைக் காட்டும் அரையாண்டுத் திரட்டுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்படுகின்றன என்பதனையும். (இந்தத் திரட்டுக்கள் முறையே நிதி ஆண்டின் ஜூலை 31 ஆந் திகதிக்கும் அடுத்த நிதி ஆண்டின் ஜனவரி 31 ஆந் திகதிக்கும் முன்னர் கணக்காய்வாளர் அதிபதி பெறுமாறு அனுப்பப்படல் வேண்டும். அரச நிதிக் கொள்கை திணைக்களத்துக்கும் ஒரு பிரதி அனுப்பப்படல் வேண்டும்) | அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 06 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட கருமம் ஒன்று செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. அக் கருமத்தை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நாளது வரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போது கடமையாற்றும் பதவியணி மீதான விபரங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முக்கியத்துவத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாடுகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் விளைவுகளை மதிப்பீடு செய்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதித் தேவை திட்டம் (Imprest Requiment Plan) செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

#### 2.1.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் 21 செய்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டிருந்ததுடன் 20 செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

i. செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சிறிய மற்றும் மத்திய அளவிலான மீன் கைத்தொழிலுக்காக புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் கீழ் சூரிய வலு சக்தி அலகு வழங்குவதற்காக ரூபா 80.1 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டு அந்த செய்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் நூற்றிற்கு நூறு விளைவு ஒன்றினை கைப்பற்றுவதற்கு (output) எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமிட்டுள்ளவாறு நிறைவேற்றுவதற்கு முடியாமையினால் ரூபா 80.1 மில்லியன் ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்கவில்லை.

ii. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் கட்டிடங்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் கீழ் 07 கடற்தொழில் மாவட்ட அலுவலகங்களின் திருத்த வேலைக்காக ரூபா 15 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்படாத 3 விடயங்கள் நிறைவேற்றி அதற்காக ரூபா 2.7

மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமையால் திட்டமிடப்பட்டிருந்தவாறு நீர்கொழும்பு மற்றும் கல்முனை மாவட்ட கடற்தொழில் அலுவலகங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 பிரதான செய்பணிகளின் கீழ் 32 செயற்பாடுகளுக்காக ரூபா 431.2 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த கருமங்களின் செயலாற்றுகை குறிகாட்டிகளை குறிப்பிடப்பட்டிருக்காமையால் செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(இ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

2017 ஜனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்ட 2017 நவம்பர் 30 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் ட்ரான்ஸ்பொன்டர் மற்றும் சூரிய உயிர்அனு வழங்கல் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 500 மில்லியன் ஏற்பாடுகளில் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 343 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 31 திகதி வரை அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**2.1.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 ஆகஸ்ட் 15 திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.2 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளல்**

திணைக்களத்தினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 90.55 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 68.30 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.1 பெறுகைகளைத் திட்டமிடல்**

திணைக்களத்தினால் பெறுகைகள் திட்டமிடும் போது மீண்டுவரும் செலவுகளின் கீழ் வரக்கூடிய பெறுகைகளை உட்படுத்தாமல் மூலதன செலவுகளின் கீழுள்ள பெறுகைக்களை மாத்திரம் உட்படுத்தியிருந்தனர்.

**2.2.2 பெறுகை செயன்முறையை செயற்படுத்துதல்**

(அ) கடற்தொழில் துறைமுகங்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்தொழில் செய்வோருக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் கீழ் ஒன்று ரூபா 79,000 தொகை வீதம் 2328 இலத்திரனியல் டப்லட் கொள்வனவு செய்வதற்காக ரூபா 183,912,000 செலுத்தப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8(ஆ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு நிபுணர் ஒருவர் பங்குபற்றியிருக்கவில்லை. 2328 இலத்திரனியல் டெப்லட் இல் 1816 ஐ 2018 ஜூன் 10 திகதி வரை வினியோகித்திருக்கவில்லை. இந்த இலத்திரனியல் டெப்லட் பயன்படுத்துவது தொடர்பாக மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தி, பயிற்சி வழங்கல் ஒன்று மேற்கொள்ளாமையால் அனேக மீன்பிடியாளர்கள் இந்த இலத்திரனியல் டெப்லட்

பெற்றுக்கொள்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு விருப்பமின்மை காட்டியதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் டெப்லட் கொள்வனவு செய்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீனவ பெண்களுக்காக மாற்று வருமானம் உருவாக்குவதின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட மாசி தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக 76 நலன்பெறுவோருக்கு வினியோகிப்பதற்காக 304 பைபக்ளாஸ் மீன்பெட்டிகள் 76 உலோக சட்டிகள் உட்பட உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4.34 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.1(அ) மற்றும் 2.12, 4.2.2(அ) மற்றும் 8.9.1 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.1 வருடாந்தப் பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதியில் 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதனது அறிக்கை சுற்றுநிருபத்தின் பந்தி 3.1.6 இன் பிரகாரம் 2018 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினால் அவ் அறிக்கை 2018 அக்தோபர் 26 திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக 2016 ஆண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிக்கைகள் சுட்டிக்காட்டியிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி | |
| 2015 | 3.8.1 | எரிபொருள் விலை அதிகரித்த காரணத்தினால் மீன்பிடி வள்ளங்களின் உரிமையாளர்களுக்கு நிவாரணம் ஒன்றாக எரிபொருள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 4,550 மில்லியன் திறைசேரியினால் செலவிடப்பட்டிருந்தது. பெற்றோலிய கூட்டுத்தாபன தகவல்களின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| | | வழங்கியிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 4,374 மில்லியனாகும். திறைசேரி பிணைமுறி ஒன்றின் மூலம் செலுத்தியிருந்த ரூபா 4,330 இற்கான தொகைக்காக திறைசேரியால் வட்டி செலுத்தப்படுவதினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 176 மில்லியனுக்காக திறைசேரியினால் வருடாந்தம் செலுத்தப்படும் வட்டித் தொகையும் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டமொன்றாகும். |
| 2016 | 3.7 | 2016 ஆம் ஆண்டு 10 படகுகள் உற்பத்தி செய்வதற்காக ரூபா 149.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு இருந்த போதிலும் 5 படகுகள் 2018 செப்தெம்பர் அளவிலும் பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்கவில்லை. |

## 2.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ட்ரான்போன்டருடனான 378 பல நாள் படகுகள் செயற்படாமல் இருந்ததுடன் 57 சர்வதேச கடல் எல்லையை மீறியிருந்தது. செயற்படாதிருந்த படகுகளை திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 செய்பணிகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொண்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்**

கடற்தொழில் மற்றும் நீர் வாழ்வள அபிவிருத்தி அமைச்சினால் பல்வேறு கருமங்களுக்காக ரூபா 24.6 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிரந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 6.51 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த ஏற்பாடுகளில இருந்து ரூபா 18.09 மில்லியன் அதாவது 73 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.7 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 01 இற்கான கூட்டுத்தொகை ரூபா 20 மில்லியனிற்கான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 24.84 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 124.2 சதவீதமாகும். வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 10.03.07.06 கொண்ட வருமானக் குறியீடு – வருமானக் கணக்கு

i. நி.பி. 85(1)(இ) இன் பிரகாரம் முடிந்த அளவு நடைமுறை சாத்தியமாக மற்றும் சரியான முறையில் தமது மதிப்பீடுகள் தயாரிக்காமையினால் மதிப்பீடு வருமானத்தை மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் திருத்திய வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

ii. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 150,000 இற்கான வருமானம் 2015 ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்டது.

iii. நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டுடன் தொடர்புடைய அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

iv. மீன் தயாரிப்பு நிலையங்களில் பெற வேண்டிய ரூபா 16,000 தொகையினை வருமானக் கணக்கில் காட்டியிருக்கவில்லை.

v. கடந்த ஆண்டில் உள்ளவாறான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளவாறான வருமானம் அதிகரித்தல் ரூபா 2,037 தொகையாக இருந்தது. 2017 ஜுன் 15 திகதிய 2023/15 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட 4 புதிய வருமானத் தலைப்புக்களின் கீழ் இறக்குமதி, இறக்குமதி மீள் ஏற்றுமதி மற்றும் ஏனைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாக வருமானம் கிடைத்திருத்தல் வருமான அதிகரிப்பிற்காக காரணமாகியிருந்தது.

vi. 2015 ஜுலை 20 திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உப அடுக்குகளில் கடல் உயிரின வளர்ப்புக்காக 01 ரூபா 100 கட்டணம் ரூபா 50 என குறைந்திருந்தமையால் அனுமதிப் பத்திரக் கட்டணம் சந்தை பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதி ஒன்று அனுமதிப்பத்திர கட்டணம் விதிக்காமையால் பெரும் அளவான வருமானத்தை இழந்துள்ளது.

vii. உயிரற்ற மட்டி கவசங்கள் (M2) போக்குவரத்து மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் மீளாய்வாண்டு முதல் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கம் தோண்டும் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 3.8 மில்லியன் தொகை என கடந்த ஆண்டு கிடைத்திருந்த வருமானமொன்றினை மீளாய்வாண்டின் போது இழந்துள்ளது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29001 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 24 | 24 | 17 | 21.8 | 105 | 78 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர 2,427,199 தொகை காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 13 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரை காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கான தொடர்செயல் அலுவல்கள் பலவீன நிலைமையில் காணப்பட்டது.

**(ஆ) இடமாற்றம் பெற்றுச் சொன்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

2004 அக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் எழுதி அனுப்பி தாமதமின்றி அந்த உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட திணைக்களத்தினால் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே போல் அவை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். எனினும் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாத மூன்று உத்தியோகத்தர்களின் அந்தக் கடன் மீதி ரூபா 352,510 தொகை ஆகும்.

## 2.9 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட 01 கட்டுநிதிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.78 மில்லியன் ஆகக் காணப்பட்டது. நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் வழங்கப்படும் துணைக் கட்டுநிதி அது வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டுமெனினும் 2017 ஆண்டின் போது வழங்கியிருந்த விஷேட சிறுகாசு முற்பணம் மற்றும் விஷேட எரிபொருள் முற்பணம் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்த 39 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.10 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் அது நாளது வரை ஆக்கியிருக்கவில்லை.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

(அ) 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக முறையே கணக்காய்வு ஐய வினாக்கள் 09 மற்றும் 08 வழங்கியிருந்ததுடன் அவற்றில் பதில் கிடைக்காத 02 கணக்காய்வு ஐய வினாக்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவரின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(இ) 2009 ஜுலை 09 திகதிய DMA/2009(1) இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவை வலுப்படுத்துவதற்காக கணக்குகள் மற்றும் கணக்காய்வு தொடர்பான அறிவு மற்றும்

பயிற்சி உடைய போதியளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இணைத்திருக்கவில்லை.

(ஈ) 2009 அக்தோபர் 07 திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் இலக்கம் DMA/2009(3) இன் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த உள்ளக கணக்காய்வு நியமங்கள் 1210 இன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு உள்ளகக் கணக்காய்வு விடயத்திற்கு தேவையான அறிவினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி 324 காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 336.07 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு வருடாந்தம் ரூபா 492,060 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 37 | 11 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 20 | 13 | 07 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 831 | 544 | 287 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 88 | 19 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1006 | 683 | 324 | 01 |

## 2.13 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை நெருங்குதல்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 ஆண்டளவில் அவர்களின் அமைப்பை சேர்ந்த அனைத்து நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தியிருந்தது. அதற்கு பொருந்தக் கூடிய விதமாக இந்த திணைக்களத்தினால் எதிர்பார்த்த குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்கண்டிருக்காததுடன் சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் செய்யும் செயன்முறைகளையும் இனங்கண்டிருக்கவில்லை.